# சிறுவர் இலக்கியத்தில் பாரம்பரிய மருத்துவம்

# Siruvar Elakiyathil Parampariya Maruthuvam

***முனைவர் ஆ. பிரசாந்த்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

**Dr. B. Prashant**
*Assistant Professor, Tamil Department*
*KG College of Arts and Science*
*Coimbatore*

**ஆய்வுச் சுருக்கம்**

*சிறுவர்கள் இன்று பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகின்றனர். புதிய புதிய தகவல்களைத் தேடிப் பெறுவதில் ஆர்வம் கொண்டவர்களாய் விளங்குகின்றனர். நவீன உலகிற்கு ஏற்ப அறிவியல் யுகத்தை மட்டுமே நோக்கி வளரும் பிள்ளைகள் செல்கின்றனர். பழையதைத் தேடுவது இல்லை. இதனால் நமது பாரம்பரியமானது அழிய வாய்ப்புண்டு. எனவே தான் அறிஞர்கள் பலர் பாரம்பரியத்தைக் காக்கப் போராடி வருகின்றனர். அந்த வரிசையில் சிறுவர் எழுத்தாளர்கள் தங்களை முன்னிருத்தி வருகின்றனர். நமது பாரம்பரியத்தினுள் பல்வேறு நிலைகள் இருப்பின் அதில் மருத்துவ முறை குறிப்பிடத்தக்கது. சிறுகாயம், காய்ச்சல் எனப் பல சிறு நோய்களுக்கு இன்று ஆங்கில மருத்துவத்தையும் மருத்துவமனையையும் நாடுகின்றோம். நம் முன்னோர்கள் செய்த முதலுதவியைச் செய்யாமல் நேரடியாக மருத்துவமனைக்கு செல்கின்றோம். ஆங்கில மருத்துவத்தை அதிக அளவு பயன்படுத்துவதினால் பக்கவிளைவு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே இதில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளவேண்டுமாயின் நாம் நம் பாரம்பரிய வைத்தியமான பாட்டி வைத்திய முறைக்குச் செல்லவேண்டும்.*

**Abstract**

*Children today are making achievements in various fields. They are interested in finding new information. According to the modern world, the growing children are only going towards the scientific age. No search for the old. Due to this our tradition is likely to be destroyed. That is why many scholars are fighting to preserve the tradition. In that line, children's writers are presenting themselves. In our tradition there are various stages and among them the medical system is significant. Today we seek English medicine and hospital for many minor diseases like minor injuries and fever. We go straight to the hospital without doing the first aid our ancestors did. Overuse of English medicine may cause side effects. So if we want to protect ourselves from this we have to go to our traditional medicine which is patti medicine. That is why our children's*

எனவேதான் நமது சிறுவர் எழுத்தாளர்கள் சிறுவர்களுக்கு மூலிகையை அறிமுகப்படுத்துவதின் வாயிலாக பாரம்பரியத்தை மீட்டெடுத்து வளமான பாரதத்தை உருவாக்க முடியும் என்று இலக்கியங்கள் மூலம் பாரம்பரிய மருத்துவத்தை அறிமுகப்படுத்துகின்றனர். இக்கட்டுரை அம்மருத்துவம் மற்றும் பயன் குறித்து எடுத்துரைக்கும் முகமாக அமைகிறது.

*முக்கியச் சொற்கள்:*

*சிறுவர் இலக்கியம், பாரம்பரிய மருத்துவம், மூலிகை, வைத்தியமுறைகள், பாட்டி வைத்தியம்.*

*writers are introducing traditional medicine through literature to restore the tradition and create a prosperous Bharat by introducing herbs to children. This article deals with the treatment and benefits of this medicine.*

***Keywords:***

*Children's Literature, Traditional Medicine, Herbal Remedies, Grandmother Remedies.*

**Citation**

Prashant, B. "Siruvar Elakiyathil Parampariya Maruthuvam." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 1, 2022, pp. 34–42.

**உடல்**

*தொல்காப்பியர் காலம் தொடங்கி வள்ளுவர், திருமூலர், சித்தர் எனப் பல்வேறு காலகட்டத்தில் வாழ்ந்த இவர்கள் மெய்ப்பொருளைக் காண எண்ணி ஆராய்ந்தனர். உலக வழக்கில் உடம்பானது பொய்ப் பொருள் என்று உணர்ந்தவாகள் கூட உடலை ''மெய்'' என்றே அழைத்தனர். உடலே எல்லாவற்றிற்கும் அடிப்படை இதை உலகில் உள்ள எவராலும் மறுக்க இயலாது. இதனை,*

***மன்னுமிந்தப் பூவுலகில் மாண்புற பல்பொருளு***
***ளுனுடம் பிற் கொப்பிலையா லுக்கியதைப் - பன்னும்***
***பிணியெஃதுஞ் சாராது பேணி - வளர்த்தென்றும்***
***பணியுமா நாள் வாய் பரிந்து***

*என்பதன் மூலம் உலகில் விலை மதிக்க முடியாத பெறமுடியாத பல பொருள்கள் இருப்பினும் அவை அனைத்தும் உடம்பிற்கு ஈடு இணையாகா என்று வ.உ.சி கூறியுள்ளமையின் மூலம் உடம்பின் மகத்துவத்தை அறியமுடிகிறது.*

**நோய்**

*உடம்பைப் பேணுவதற்கான முதற்படி உணவு. உடலை இயக்குவதற்கு உணவு என்னும் எரிபொருள் தேவை. அவ்வுணவினை முறையாக அளவறிந்து சரிவிகிதமாய்ப் பகுத்துண்டால் நம் உடலானது எவ்வித இடையூறும் இன்றி சீராக இயங்கும். அதை விடுத்து உணவில் மாற்றம் ஏற்படின் நோய் உண்டாக வாய்ப்புண்டு. இதனை,*

***பார்த்து நன்கு பின்னர் பதார்த்த குண மேற்பவற்றை***
***யோர்த்துணர்ந்து கொள்ளென்று முன்னலத்தைப் போக்கும்***
***பிறபொருள்கள் கொள்ளாய் பிணியுற்றாற் கொள்வாய்***
***பல பிணிகள் தீர்த்தானைப் பார்த்து***

*என்ற வ.உ.சி யின் கூற்று வாயிலாக நோயிற்கான காரணத்தை அறியலாம்.*

**மருந்து**

*மருந்து நோயைக் குணப்படுத்தும் ஒரு பொருள். அகம் மற்றும் புறத்தில் உண்டாகும் நோய்களுக்கு மருந்தே தீர்வு*

***வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்***
***நாரி மருந்தென்னும் நந்தி சுருள் செய்தான்***
***ஆதி மருந்ததென்றறிவர் அகலிடஞ்***
***கோதி மருந்திது சொலல்***

*என்ற திருமூலரின் பாடல் வரிகள் மருந்தின் தன்மையையும் அதன் தகைமையையும் நமக்கு உணர்த்துகிறது.*

**சிறுவர் இலக்கியத்தில் மருத்துவம்**

**மூலிகை மருத்துவம்**

**ஆல் மற்றும் வேல்**

*மனித உறுப்புகளுள் பற்களுக்கு முக்கிய இடம் உண்டு. பல்வரிசை ஒழுங்குதான் ஒருவருடைய முக அழகை நிர்ணயிக்கிறது. ''பல் போனால் சொல் போச்சு'' என்பது பழமொழி. மனிதப் பற்கள் மொத்தம் 32. மேற்தாடையின் இடப்புறம் 8 பற்களும், வலப்புறம் 8 பற்களும்*

*கீழ்தாடையில் இருபுறமும் எட்டு எட்டாக மொத்தம் 16 என்ற வரிசையில் அமைந்திருக்கும். உண்ணும் உணவினை அரைத்து உமிழ்நீருடன் சேர்த்து சீரணம் செய்வதற்கு ஏதுவான நிலையில் உடலுக்குள் அனுப்பும் ஓர் உறுப்பாகச் செயல்படுகிறது இத்தகைய சிறப்பு வாய்ந்த பற்கள் சரிவரப் பேணப்பட வேண்டும். சரிவரப் பேணவில்லையாயின் பல்குறைபாடு ஏற்படும். எனவே பற்களைப் பாதுகாக்க வேண்டும். பற்களைப் பாதுகாக்க குழ. கதிரேசன்,*

***கல்லாய் இருக்கிற வெள்ளைப் பற்களைக்***
***குச்சிகள் கொண்டு நாம் விளக்கணும் ஆலங்***
***குச்சிகள் கொண்டு நாம் விளக்கணும் - வேலங்***
***குச்சிகள் கொண்டு நாம் விளக்கணும்***

*என்று கூறுகிறார். நாகரீகம் என்னும் பெயரில் பல்வேறு வகையான பற்பசைகளை வாங்கிப் பயன்படுத்துகின்றோம். இது விளம்பர நோக்கத்திற்கானவை. நம் பற்கள் ஆரோக்கியத்துடன் இருக்க குழ.கதிரேசன் கூறுவது போல் இயற்கையில் கிடைக்கும் ஆலம், வேம்பு முதலானவை கொண்டு பல் துலக்க வேண்டும். அப்போது தான் பற்கள் வலிமையுடனும் அழகுடனும் இருக்கும்.*

**புனுகு**

*புனுகு என்பது புனுகுப் பூனையில் இருந்து வெளிவரும் திரவமாகும். வாலுக்கும் குதத்துக்கும் இடையில் இருக்கும் சுரபிகளில் இருந்து சுரக்கும் வாசனைத் திரவமாகும். இது பிசின் போன்று இருக்கும். இப்பிசினே இனப்பெருக்கத்திற்கு உதவுகிறது. மேலும் புகையிலைப் பொருள்களின் வாசனைக் கூட்டியாகவும் பயன்படுகிறது. புனுகுவின் பயனை கொ.மா.கோதண்டம்,*

***அதுதான் புனுகுப் பூனை வால் தொடங்கும் இடத்தில் உள்ள பையில் உற்பத்தியாகிறது. புனுகு அதனை அது சில வேளை மரத்தில் பீச்சிவிடும். அது மிகுந்த வாசனையுடைய மருந்துப் பொருள். அப்பொருள் பல்வேறு மருந்துகளுக்கு உதவும் என்பதால், சிலர் புனுகுப் பூனையைப் பிடித்து மூங்கில் தட்டிப் பந்தயத்தில் அடைத்து வளர்ப்பாங்க என்று கூறுகின்றார்.***

*மனிதர்களின் பயன்பாட்டில் மருத்துவம் மற்றும் வாசனைப் பொருளாகப் பயன்படும் புனுகு, புனுகுப்பூனையின் இனப்பெருக்கத்திரவமாகும். புனுகுவின்பயன்பாடு அதிகரிப்பினால் அவ்வகையுயிரியைப் பிடித்து தேவைக்குப் பயன்படுத்தி அழித்துவிடுகின்றனர். இதனால் அவ்வுயிரினம் அழிய வாய்ப்புண்டு எனவே மருத்துவப் பயன்பாடுள்ள இவ்வுயிரினத்தைக் காக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.*

**சிறியா நங்கை**

*சிறியா நங்கை குறித்து போகர் தனது “ஜெனை சாகரம்” என்ற நூலில் கூறியுள்ளமையை*

***நாமென்ற சிறியா நங்கை வேரைத் தின்றால்***
***நல்லதொரு விஷமெல்லாம் நாடாதோடும்***
***வாமென்ற கடைச்சி வேரைத்தின்ன - வல்லதொரு***
***விஷங்களெல்லாம் வாங்கும் வாங்கும்***

*என்று விகடன் பிரசுரம் எடுத்துக்காட்டியுள்ளது. அதாவது சிறியா நங்கை வேரை அரைத்துத் தின்றாலும், கடைச்சி வேரை அரைத்துத் தின்றாலும், சிந்தின் தண்டின் பாலை உண்டாலும் விஷங்கள் நீங்கும் என்பதே அதன் பொருளாகும். இச்சிறியா நங்கையின் மகத்துவத்தினை*

*உணர்ந்த சிறுவர் எழுத்தாளர் கொ.மா.கோதண்டம்,*

***ஒரு மரத்து நாரை உரித்துக் கடிவாய்க்கு மேல் கட்டினான். கடிபட்ட இடத்தில் கத்தியால் எக்ஸ் மாதிரி கீறிவிட்டான். மேலும் கீழும் அழுக்கி இரத்தத்தை வெளியேற்றினான். மாணவர்கள் அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். நீலன் ஓடிச் சென்று சிறியா நங்கை இலையைப் பறித்து வந்து ஒரு கைப்பிடி இலையை அவரிடம் தந்து மென்று விழுங்கச் சொல்லிவிட்டு மற்றமொரு கைப்பிடி இலையைக் கல்லில் வைத்தத் தட்டி எடுத்துக் கடிவாயில் வைத்தான்.*** *என்று சிறியா நங்கையின் பயனை விவரிக்கின்றார். பாம்பு கடித்த பிறகு முதலில் நாம் அடைவது பதற்றம். அது கூடாது. பதற்றப்படாமல் முதலில் ஆசிரியர் கூறியது போல் விஷமுறிவு இலையான சிறியா நங்கை இலையைக் கொண்டு முதலுதவி செய்ய வேண்டும். அதன் பின்பு மருத்துவரை அணுகுவது நலன் பயக்கும் என்பது கதையின் வாயிலாக தெரியவரும் செய்தியாகும்.*

**வில்வம்**

*வில்வமரம் தெய்வீக மூலிகை மரம். இது கோவில் தோறும் வளர்க்கப்படுகிறது. இதன் இலையை இறை வழிபாட்டிற்குப் பயன்படுத்துவர். வில்வமரத்தின் ஒவ்வொரு பாகமும் ஒரு பயனைத் தருகிறது. உதாரணமாக வில்வவேர் நோயை நீக்கி உடலைத் தேற்றி சதை நரம்புகளுக்கு வலுசேர்க்கும் குருதிக் கசிவை நிறுத்தும். பூ மந்தத்தைப் போக்கும். இலை காச நோயைத் தடுக்கும். கொழுந்து புற்றுநோயை குணப்படுத்தும் என்பன போன்ற பல நோய்களுக்கு நிவாரணியாகும். பல்வேறு நோய்களுக்கு நிவாரணியாகப் பயன்படும் வில்வத்தின் மேலுமான மகிமையை கொ.மா.கோதண்டம்,*

***நம்ம அய்யனார் மலையில் மகாவில்வம் அப்படிங்குற மரங்க இருக்காம். அந்த இலைகள் எடுத்து சாறு பிழிந்து அதை மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குக் கொடுத்தா நல்லதுனு ஒரு மருத்துவர் சொன்னாரு***

*என்று கதை மாந்தர்கள் பேசிக் கொள்வது போல் அமைத்து மூளை வளர்ச்சிக்கு உதவும் என்ற புதிய தகவலைத் தருகின்றார். இதே போல் வில்வத்தின் பயனை விலங்குகள் பேசிக் கொள்வது போல் அமைத்துள்ளார். அவை,*

***சரி மாருதி, இந்த படிப்பு வராதவங்க ஞாபக சக்தி குறைஞ்சவங்களுக்கு என்ன செய்யலாம் சொல்லு யானை கேட்டதும் மாருதி யோசித்தது.***

***அரசே! ஒரு அற்புதமான மூலிகை பேரு மகாவில்வம். இது இராவனேஷ்வரன் காலத்து மூலிகையாம். இப்ப பல பெரிய வீடுகள்ல முக்கிய கோவில்களில் இது நட்டுக்காங்களாம். இந்த மூலிகையால் பெருவியாதி வெண்குஷ்டம் இதெல்லாம் தீக்கலாமாம். அதன் இலைய சாப்பிட்டா ஞாபக சக்தி ரொம்ப கூடுதாம். உடம்புக்கு புது தெம்பு பெறக்குதாம். இது இப்ப நாட்டுக்குள்ள பிரபலமாயிட்டு வருதாம்*** *என்று பதில் கூறுவது போல் கதையை அமைத்துள்ளார். இதன் மூலம் மகாவில்வத்தின் இலையை கோவில்களில் வளர்ப்பதற்குக் காரணம் அதன் மருத்துவத் தன்மையினை அறிந்ததன் பொருட்டேயாகும். மருத்துவர் கூட பார்ப்பதற்கு அருவருக்கத்தக்கதாய் இருக்கும் குஸ்டம் போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளது. உடல் வலுப்பெறும். அதுமட்டுமின்றி மூளைவளர்ச்சி, ஞாபகத்திறன் என்றாலே நம் அனைவரின் நினைவிற்கும் வருவது வல்லாரை ஒன்றேயாகும். அவ்வல்லாரைக்கு இணையாய் மூளைக்கு உயிரூட்டும் பணியை வில்வம் செய்கிறது என்று கொ.மா.கோதண்டம் கூறியுள்ள செய்தி புதுமையான ஒன்றாகும்.*

**பிரண்டை**

*பிரண்டை அல்லது வச்சிரவல்லி மருத்துவப் பயன்பாடுடைய தாவரமாகும். இது கொடிவகையைச் சார்ந்தது. இது வேலிகளிலும், பற்றைக் காடுகளிலும் அதிகம் வளர்கிறது. பிரண்டையில் சாதாரணப் பிரண்டை, சிவப்பு பிரண்டை, உருபடுப் பிரண்டை, முப்பிரண்டை, தட்டைப் பிரண்டை எனப் பல வகைகள் உள்ளன. இதை இந்தியா மற்றும் இலங்கையில் அதிகம் காணமுடியும். இதனுடைய வேர் மற்றும் தண்டுப் பகுதிகள் மருத்துவத்திற்குப் பயன்படுகின்றன. இதனை,*

***பிரண்டை மிளகு புளியிலை மூன்றின்***
***தருந்துவையல் நாச்சுவை நற்சத்து***

*என்ற சித்தமருத்துவக் குறள் வழி அறியலாம். வீக்கம், சுளுக்கு, பிடிப்பு, வலி போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணியாக உள்ளது. சிறந்த வலி நிவாரணி என்பதை கொ.மா.கோதண்டம்,*

***அப்பா மாருதி! நான் உன்னத்தான் பார்க்க வந்தேன். பத்து நாளா பல்வலி எடுக்குதுப்பா ஒரு மருந்து சொல்லேன் என்று வந்தது யானை.***

***சரி அண்ணே! பல்வலி, எலும்புவலி, நகம்வலி, இதுகளுக்கு பிரண்டைக் கொடியை பறிச்சி சாப்பிடுங்கண்ணே சரியாய் போயிடும்***

*என்ற விலங்குகள் பேசிக் கொள்வது போல் பிரண்டையின் பயனை நமக்கு உணர்த்துகிறார். அதுமட்டுமின்றி பிரண்டையின் மூலம் மூளை நரம்புகளைப் பலப்படுத்தும் எலும்புகள் சந்திக்கக் கூடிய இணைப்புப் பகுதியிலும் நரம்பு முடிச்சுகளிலும் வாயுவின் சீற்றத்தால் தேவையற்ற நீர் தேங்கிவிடும். இதன் காரணமாக எலும்பு பகுதியில் அதிக வலி உண்டாகும். அதில் இருந்து விடுபட பிரண்டையானது முக்கிய பங்கு வகிப்பதை அறியமுடிகிறது.*

**அத்தாலொட்டி மூலிகை**

*விபத்தின் போது சிறுமுதல் பெரும் காயங்கள் வரை ஏற்படும். விபத்து ஏற்பட்ட அடுத்த வினாடியில் மருத்துவரை நாடுகின்றோம். இனிமேல் அதை கொ.மா.கோதண்டம் வேண்டாம் என்கிறார். ஏனெனில் ஆங்கில மருத்துவம் முதலானவை வளராத காலகட்டத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் இயற்கை மருத்துவத்தையே அதிகம் பயன்படுத்திவந்தனர். அந்த வகையில் சதைப் பிய்வைச் சரிசெய்யும் மூலிகை ஒன்றை அறிமுகப்படுத்துகிறார். அவை,*

***அரசே இதுக்கு பேரு அத்தாலொட்டி மூலிகை இந்த மூலிகை பிய்த்த சதையை ஒட்டி புண்ணையும் ஆற்றிவிடும். ஊரில் மனிதர்கள் சதை பிய்த்தால் அதை தையல் போடுவார்கள். இந்தப் பச்சிலையை அரைத்துப் போட்டால் தையல் போட வேண்டாம். ஒவ்வொரு ஊரிலும் ஒரு தோட்டம் போட்டு மனிதர்கள் இதை வளர்த்தால் பல வைத்தியர்களுக்கு வேலையில்லாமலே போயிடும்*** *என்பதன் மூலம் அத்தாலொட்டி மூலிகையின் பயனை அறியலாம். சதைப் பிய்த்தால் நாம் பெரும்பாலும் தையல் போடுகின்றோம். சதை இணைப்பு ஏற்பட்டாலும் அதன் வடுவானது மறைவதில்லை. இதனால் அழகு கெடுவதோடு மனஉளைச்சலும் ஏற்படும். எனவே அதில் இருந்து விடுபட கொ.மா.கோதண்டம் கூறியுள்ள அத்தாலொட்டியைப் பயன்படுத்தித் தீர்வு காணலாம்.*

**அறுகு**

*அறுகம்புல் ''சைனோடான்புல்'' வகையைச் சேர்ந்த மருத்துவ மூலிகையாகும். அறுகிற்கு மூதண்டம், தூர்வை, மேகாரி,பதம், அறுகை போன்ற வேறு பெயர்கள் உண்டு.*

*தீராத நோய்களை அறுகம்புல், மிளகு தீர்க்கும் என்பது முன்னோர்களின் பழமொழியாகும். இது ஒரு சிறந்த மருத்துவ நிவாரணி என்பதை,*

***அறுகம்புல் பச்சரிசி அத்தியா வாரை***
***பெறுமியற்கை வன்மையுடற்கு***

*சித்த மருத்துவக் குறள் வழி அறியலாம். அறுகானது கோழை, கண்ணோய். சிரங்கு, பித்தம், வயிற்றுப் புண், வெள்ளை போன்ற நோய்களுக்கு நிவாரணியாக செயல்படுவதை நாம் அறிந்துள்ளோம். ஆனால் கொ.மா.கோதண்டம் இதற்கு விஷத்தினை நீக்கும் ஆற்றலும் உண்டு என்கிறார். இதனை,*

***அரசே! எங்க ஆத்தாவ ஒரு பாம்பு கடிச்சிரிச்சி, அதான் வைத்தியரைக் கூப்பிடலாமுன்னு வந்தேன் மாருதி பன்றியிடம் வேகமாகப் போயி உங்க அம்மாவ அருகம்புல்ல ரொம்ப கடிச்சி திங்க வைபி. அருகம்புல்லுல உடம்பைப் பொரட்டச் சொல்லு கடிபட்ட இடத்துல அருகம்புல்ல இடித்து ஒரு பெரிய இலைய வச்சு கட்டுப்போட்டு விசம் இறங்கிவிடும்***

*என்பதன் வாயிலாக அறுகு விஷமுறிவிற்கு நிவாரணியாக உள்ளதை அறியலாகிறது.*

**ஆலமரப்பட்டை**

*ஆல் என்பது ஆலமரம். விழுதுகளை உடைய மரமாகும். இதன் விதைகள் பழம் உண்ணும் பறவைகளால் பரப்பப்படுகின்றன. இது மரங்களில் மிகவும் அகலமானது. அகல் என்னும் சொல் மருவி ஆல் என்றானது. அகன்ற கிளைகளைக் கொண்ட ஆலத்தைத் தாங்குவதற்கு விழுதுகள் பயன்படுகின்றன. இவை கிளைகளிலிருந்து கீழ்நோக்கி வீழ்வதால் ''வீழ்'' என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இம்மரத்தின் பால், இலைகள், வேர், விழுதுகள் என யாவும் மருத்துவப் பொருளாகப் பயன்படுகின்றன என்பதை,*

***கால் வெடிப்பு வாய்வெடிப்பு கைவெடிப்பு மேகத்தில்***
***ஆல்பட்டை நற்கொதி நீராங்கு***

*என்று சித்தமருத்துவக் குறள் கூறுகிறது. இதன் மூலம் கை, கால், வாய், முகம் என அனைத்துப் பகுதியில் ஏற்படும் வெடிப்பிற்கு இது பயன்படுகின்றதை மேற்கண்ட கூற்று மெய்ப்பிக்கும். இவ்வாலம்பட்டையின் மூலம் உண்டாகும் மற்றொருப் பயனை கொ.மா.கோதண்டத்தின் சான்றாதாரங்களைக் கொண்டு அறியலாம். அவை,*

***சாமி ஊர்ல ஆலமரம் இருக்குமில்ல இப்படி பட்டைப்பாலை தடவிவந்தா பித்தவெடிப்பு சரியப் போகும், பல்லுக்கு கொழுந்து பாலு*** *என்று கூறியுள்ளதன் மூலம் வெடிப்பு மற்றும் பல்வலியைப் போக்க முடியும் என்பது தெரிகிறது. உடல்சூட்டையும் போக்கும் என்றும் கூறியுள்ளார். இதனை* ***சாமி பட்டையக் காயவச்சி பொடிபண்ணி ராத்திரி சாப்புட்டா நீரிழிவு நோய் கட்டுப்படும் சாமி. இதன் விதைகளை லேகியம் செய்து சாப்புட்டா உடல் சூடு மாறி குளர்ச்சியாகிவிடும்*** *என்கிறார். அதாவது நீரிழவு நோயானது கடினமாய் உழைப்பவர்களுக்கு ஏற்படுவதில்லை என்ற எண்ணம் நிலவி வருகிறது. உடலின் இடது பக்கம் உள்ள கணையத்தில் சுரக்கும் இன்சுலின் நேரடியாக இரத்தத்தில் கலப்பதால் உடலில் உள்ள சர்க்கரை ஜீரணிக்காமல் தங்கிவிடுகிறது. சிறுநீர் அடிக்கடி கழிதல், களைப்பு, தாகம், கடுமையான பசி எடைகுறைதல் போன்றவை ஏற்படுகின்றன. இதனால் மக்கள் பலர் அவதியுறுகின்றனர். இதற்கான தீர்வாக இன்று ஆங்கில மருத்துவத்தை நாடி உடம்பை புண்ணாக்கும் வகையில் தினமும் ஊசியினைச் செலுத்தி கொள்கிறோம். இது அந்நோயைவிட கொடுமையானது. எனவே நோயிலிருந்து*

*முழுமையாக விடுபட கொ.மா.கோதண்டம் கூறுவது போல் ஆலம்பட்டையை உண்டு நீரிழிவு நோயைத் தீர்த்துக் கொள்வோம்.*

**கட்டுக்கொடி (ம) கல்தாமரை**

*உடல் உஷ்ணம் எனப்படும் உடல் சூடானது பொதுவாக எல்லாக்காலங்களிலும் மனிதனைத் தாக்கக் கூடியதாக உள்ளது. இந்நோய் ஆண், பெண் இருபாலரையும் தாக்கக்கூடியது. உண்ணும் உணவு முறைகளிலோ அல்லது மாற்றம் அடையும் தட்பவெப்பநிலைகளாலோ, உடலானது உஷ்ணம் அடைகிறது. இந்நோயை போக்க "ஓமலு கிடு" என்னும் முட்கள் நிறைந்த கட்டுக் கொடியின் வேரினை அரைத்து வெந்நீரில் கலந்து குளிக்கவேண்டும். இதனை,*

***கட்டுக் கொடியேலம் காய்ச்சிய நீர்***

*என்று சித்த மருத்துவக் குறள் கூறகிறது. சித்த மருத்துவக் குறள் வழிநின்றதனைப் போல் கொ.மா.கோதண்டம் கதையும் அமைகிறது.*

***கட்டுக் கொடிச் சாறு நம்ம உடம்புச் சதையை கெட்டிப்படுத்தும், இதன் சாறு எடுத்துவச்சா கொஞ்ச நேரத்துல அல்வா மாதிரி கெட்டியாகிவிடும் அதை இதுல சர்க்கரை சேர்த்து சாப்பிடுவாங்க உடம்பு சூடும் கட்டுப்படும் எவ்வளவோ நல்லது***

*என்கிறார். உடல் சூட்டைத் தணிக்கும் மற்றொரு மூலிகையாக கல்தாமரை விளங்குவதாக கொ.மா.கோதண்டம் கூறுகிறார். இதனை,* ***யப்பா எனக்கு ரெண்டு நாளா உடம்புல ஒரே சூடு தகதகன்னு எரியுது, என்னப்பா செய்யலாம்?*** *என்று விலங்கு ஒன்று வினாத் தொடுக்க மற்ற விலங்கு பதில் கூறுவது போல் அமைக்கப்பட்டுள்ளது.* ***அடுத்த சரிவுல பாறைக்கடவுல கல்தாமரைக் கொடி இருக்கு. இது யாரும் எடுக்க முடியாத பாறைக் கடவுலதான் முளைக்கும் அந்த இலையை சாப்புட்டா உடனே சூடுதணிஞ்சிடும் வாங்க போகயில பறிச்சி தாறேன்*** *என்று கூறியதை கொ.மா.கோதண்டம் எடுத்துக்காட்டுகிறார். இங்கு கல்தாமரை என்ற பெயரில் விற்கப்படும் போலியான மருத்துவப் பொருளிற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அது கிடைக்கும் இடம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும், பயனையும் கொடுத்திருப்பது பயனுள்ள தகவலாகும். போலியாட்கள் இதனால் குறைவதற்கு வாய்ப்புண்டு.*

**முடிவுரை**

*குழ.கதிரேசன் மற்றும் கொ.மா.கோதண்டம் நமது சுற்றுப்புறத்தில் கிடைக்கும் மூலிகைகளான அறுகு, சிறியாநங்கை, வில்வம், ஆலமரம், வேம்பு, அத்தாலொட்டி, கல்தாமரை முதலானவற்றைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்திட முடியும் என்கின்றனர். அம்மூலிகையைக் குறித்து குழந்தைகள் அறிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும் என்பதே படைப்பாளர்களின் நோக்கமாக உள்ளதை அறியமுடிகிறது.*

**பார்வை நூல்கள்**


1. *கதிரேசன். குழ - பாடுவோம் அறிவியல், நாகு வெளியீடு, சென்னை, மறுபதிப்பு - 2012*
2. *கோதண்டம் கொ.மா - ஓடி ஓடி உழைக்கணும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, முதல் பதிப்பு - 2007*
3. *கோதண்டம் கொ.மா - வைத்தியர் மாருதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, முதல்பதிப்பு - 2016*

4. இரத்தின வேலனார். சி. - சித்த மருத்துவக் குறள் நூல் இராஜராஜன் பதிப்பகம், இராஜிவ் காந்தி நகர், சென்னை - 2001
5. சிதம்பரம்பிள்ளை. வ.உ. - மெய்யறம், சண்முக விலாசம் பிரஸ், அம்பாசத்திரம் - 1930
6. திருமூலர் - திருமந்திரம், அமுரிதாரணை, கழக வெளியீடு மறுசுச்சு, சென்னை -1969
7. விகடன் - விகடன் இதழ், 17-05-2017

## References

1. *Kathiresan, K., Paduvom Ariviyal, Nagu Vezhiyeedu, Chennai, Re-edition 2012.*
2. *Godandam, K.M., Odi Odi Uzhaikanum, Palaniappa Brothers, Chennai, First edition – 2007.*
3. *Godandam, K.M., Vaidyar Maruti, Palaniappa Brothers, Chennai, First edition – 2016.*
4. *Ratna Velanar, C., Siddha Maruthuva Kural Nool, Rajarajan Pathipagam, Rajiv Gandhi Nagar, Chennai – 2001.*
5. *Chidambarampillai. Va, Vu., Meiyaram, Shanmuga Vilasam Press, Ambasatram, 1930.*
6. *Thirumoolar, Thirumantram, Amuridaranai, Kazhaga Veliyeedu, Re-print, Chennai, 1969.*
7. *Vikadan, Vikadan Magazine, 17-05-2017.*